திருவாலங்காடு வடாரண்யேஸ்வரசுவாமி

# திருக்கோயிலுக்கு பூஜை மண்டபம் ஏற்படுத்தித் தரப்படும்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, மார்ச் 18-

சட்டப்பேரவையில் திருவள்ளூர் தொகுதி கழக உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருவாலங்காடு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலிருக்கு பரிகார பூஜை மண்டபம் ஏற்படுத்தி தரப்படும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (17.3.2025) வினா விடை நேரத்தின் போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**வி.ஜி.இராஜேந்திரன் :** திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் என்பது பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்ன சபை என்று அழைக்கப்படுகின்ற திருக்கோயிலாகும். காரைக்கால் அம்மையார் இல்லற வாழ்வை துறந்து துறவியாக முக்தி பெற்ற திருக்கோயில் என்பதால் ஐதீகப்படி திருமணம் போன்ற சுப காரியங்கள் இந்த திருக்கோயிலை மையப்படுத்தி நடத்துவதில்லை. ஆகவே சுப நிகழ்ச்சிகள் நடத்திடாத சூழ் நிலையில் திருமண மண்டபம் அங்கு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி.ஜி.இராஜேந்திரன் :** முதல்வர் அவர்களை வணங்கி என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலேயே இருக்கின்ற திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை பற்றி அமைச்சர் நன்றாக விவரித்தார். பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்தின சபை திருக்கோயில் மாந்திரீக பூஜை நடத்துவதற்கு உண்டான இடம். தமிழ் நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்கள் சனிக்கிழமை வந்து பூஜை நடத்துகிறார்கள். அதற்கு கோயிலில் சிறிய இடம்தான் இருக்கிறது. சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், பிரதோஷம் போன்ற நாட்களில் இங்கு வரக்கூடிய பக்தர்கள் தங்கக்கூடிய அளவிற்கு தங்கும் வசதி ஏற்படுத்தி தரும் வகையில் விடுதி ஒன்று அமைத்திட வேண்டும். அதனை முதல்வர் அனுமதி பெற்று அமைச்சர் ஆலோசித்து செய்வார் என நம்புகிறேன். அதுமட்டுமில்லாமல் அந்த கோயிலுக்கு போகின்ற வழியில் NH205ல் திருப்பாச்சூர் சிவன் கோயில் இருக்கிறது. அங்குள்ள குளத்தினை முதலமைச்சர் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது சீரமைத்து தண்ணீர் நிரப்பிட அடிக்கல் நாட்டி பணிகளை செய்தோம். திருப்பதிக்கு செல்கின்ற வழியாக உள்ளதால் அந்த பகுதியில் கழிப்பிட வசதி மற்றும் மண்டபம் அமைத்து தர வேண்டும் என கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, அவரது கேள்வி என்பது திருமண மண்டபம் என்று இருந்தால் அதற்கான பதிலை நான் சொன்னேன். உறுப்பினர் தற்போது மற்ற காரியங்கள் செய்வதற்காக மண்டபம் வேண்டுமென கேட்டிருக்கின்றார். உடனடியாக துறை அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்து வாய்ப்பு இருந்தால் நிச்சயம் ஏற்படுத்தி தரப்படும்.

மகாசிவராத்திரி விழா என்பது கடந்த காலங்களில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படாத நிலையில் வரலாற்றை மாற்றி அமைத்து 9 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி விழா நடத்திய பெருமை திராவிட மாடல் ஆட்சியையே சேரும். அந்த திருக்கோயில்களில் ஒன்றான திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் இந்தாண்டு மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் முக்தி பெற்ற காரைக்கால் அம்மையாருக்கு சிறப்பு விழா நடத்துவதற்கு ஏற்கனவே சட்டமன்ற அறிவிப்பு செய்திருந்தோம். அந்த விழாவும் இந்த மாதம் நடைபெறுகிறது. திருப்பாச்சூர் திருக்கோயில் குளமானது பஞ்சாயத்திற்கு சொந்தமான குளமாகும். ஆகவே நீங்கள் உள்ளாட்சி அமைப்பின் மூலம் அந்த குளத்தை மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி.ஜி.இராஜேந்திரன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அவர் தங்கும் விடுதி கட்டித் தரப்படுமா என்பதை சொல்லவில்லை. நிச்சயமா இந்த பட்ஜெட்டில் அறிவிப்பார் என்று நம்புகிறேன். கடம்பத்தூர் ஒன்றியம் நரசிங்கபுரம் ஊராட்சியில் லட்சுமி நரசிம்மர் திருக்கோயில் இருக்கிறது. அதற்கு உபயதாரர்கள் முன்வந்து பணிகளை செய்கிறேன் என்று ஒப்புக் கொண்டுள்ளனர். எட்டு மாதமாக பணிகள் நடைபெறவில்லை. அதுனை மாற்றி வேறு உபயதாரர்கள் மூலமாகவோ, அல்லது அரசே ஏற்று அந்த பணிகள் நடைபெறுமா என்பதனையும், மாதம் தோறும் சுவாதி நட்சத்திரத்தன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகைதரும் அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சீர் செய்து அங்கு சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலில் 25 லட்ச ரூபாய் செலவில் உபயதாரர் பணியை மேற்கொண்டு இருந்தார். உடல்நிலை சரியில்லாததால் இடையில் அந்த பணி தடை ஏற்பட்டது உண்மை தான். தற்போது அந்த பணி விரைவுபடுத்தப்பட்டு 80 சதவீத பணி நிறைவடைந்து இருக்கின்றது. இரண்டு மாதத்திற்குள்ளாக குடமுழுக்கை நிச்சயம் நிறைவேற்றி தருவோம். அதே வேளையில் திருக்குளத்தை சீரமைக்க மண்டல குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில வல்லுநர் குழு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. வெகுவிரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்த குளம் சீரமைத்து தரப்படும்.

உறுப்பினர் கோரிய திருமண மண்டபமானது ஐதீக முறைப்படி அங்கே கட்ட முடியாத நிலை உள்ளதைதான் சொன்னேன். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வாசகத்திற்கு பொருத்தமான இந்த ஆட்சியில் அவர் கோரிய மண்டபத்திற்கான பணிகளை மேற்கொள்வதற்கு உண்டான அனைத்து முயற்சிகளையும் துறை மேற்கொள்ளும். தமிழ் நாடு முதல்வர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரை 85 திருக்கோயில்களுக்கு சுமார் 347 கோடி ரூபாய் செலவில் திருமண மண்டபங்கள் கட்டப்படுகின்றன. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு திருமண மண்டபங்களை அதிகளவு கட்டித் தருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 4.20 கோடி ரூபாய் செலவில் நான்கு புதிய திருக்குளங்கள் உருவாக்கப்பட்டு வருவதோடு, ரூ.120 கோடி மதிப்பீட்டில் 220 திருக்குளங்கள் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. 200 ஆண்டுகளை கடந்தும் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறாமல் இருந்த நாமக்கல் போன்ற திருக்கோயில்களில் தெப்ப திருவிழா நடந்தப்பட்டதன் காரணமாக இறையன்பர்கள், அந்தந்த பகுதியை சேர்ந்த மக்கள் அரசுக்கும், தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவித்தனர். அந்த வகையில் உறுப்பினர் கூறிய கோரிக்கை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று வாய்ப்பிருப்பின் நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்று உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஓ.பன்னீர்செல்வம் :** உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அவருடைய கேள்விக்கு பதில் பெற அமைச்சர் அவர்களும் சில விளக்கங்களை கேட்டார். அவர் கேள்வி கேட்கின்ற போது மாந்திரீக பூஜை பற்றி சொன்னார். மாந்திரீக பூஜை என்றால் என்ன என்று என்பதற்கு அமைச்சர் தக்க விளக்கத்தை அளிப்பாரா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** அவரும் ஆன்மீகவாதி. நீண்ட நெடிய படிக்கட்டுகளில் பல திருக்கோயில்களில் அவரது எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சுற்றி சுற்றி வருபவர். அவருக்கு தெரியாதது ஒன்றும் அல்ல. மாந்திரீகம் என்ற ஒரு வார்த்தை இந்த ஆட்சியில் திராவிட மாடல் ஆட்சியில் எங்கும் நடைபெறுவதில்லை. பரிகார பூஜையை தான் அவர் மாந்திரீக பூஜை என்று மாற்றி சொல்லிவிட்டார். பரிகார பூஜை மண்டபம் தான் கேட்டார். அந்த பரிகார பூஜை மண்டபம் ஏற்படுத்தி தரப்படும் என்பது முன்னாள் முதல்வர், சட்டப்பேரவை உறுப்பினர், பன்னீர்செல்வம் அவர்களுக்கும் உறுப்பினர் ராஜேந்திரன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எழும்பூர் தொகுதியில்,

# முதல்வர் பிறந்தநாள் புகழரங்கம்: இராமானந்த குமரகுருபர அடிகளார் துவக்கி வைத்தார்.

## செந்தில் தொண்டமான் - ஆர்.தினகரன் புகழுரை! பரிதி இளம்சுருதி தலைமை!

சென்னை, மார்ச் 18-

சென்னை கிழக்கு மாவட்டதிமுக சார்பில்மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 27, யாதும் ஊரெனச் சொல்வோமே! உலகை உறவாக்கி கொள்வோமே!! எனும்தலைப்பில் எழும்பூர் தொகுதியில், மாபெரும்புகழரங்கம் 17.03.2025 திங்கட்கிழமை, மாலை 6.00 மணியளவில், சென்னை, சேத்துப்பட்டு, மலையாளிகிளப்பில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் கழக அயலகஅணிமாநிலதுணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், முன்னிலையில் இராமானந்த குமரகுருபர அடிகளார் (சிரவையாதீனம்) புகழரங்கத்தைதுவக்கி வைத்தார். மலேசிய பாராளுமன்ற உறுப்பினர், ம.இ.கா.தேசியத் துணைத் தலைவர், டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் செந்தில்தொண்டமான் தலைவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் முதலமைச்சர், இலங்கையின் ஊவா மாகாணம், ஆர்.தினகரன் ஜெ.பி. சிங்கப்பூர் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் புகழுரைத்தனர்.

பகுதி செயலாளர்கள்: வி.சுதாகர், சொ.வேலு எம்.சி., பி.எம்.யாழினி. கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, புனிதவதிஎத்திராசன், எல்.சுந்தர்ராஜன், அ.நிர்மலாதேவி, கோ.ஏகப்பன், க.நந்தீஸ்வரன், ஆர்.டி.சங்கர்நானாராஜேஸ்வரிஸ்ரீதர்MC, புரசை.ஜி.தாமோதரன், க.வினோத், ஆர்.எஸ்.சித்திக். ஆர்.மகேஷ் முத்து இப்ராஹிம்ஷாசி.அஜித்க.பிரகதீஸ்வர் எம்.விஜயகுமார் பா.பிரகாஷ் சையத்நியமத்துல்லா, எம்.வீரேந்தர்நந்தாயாசர்சர்தார்மீரான் லோ.சுகுமாரன், எஸ்.எல்.நாராயணன் சுந்தர்ராஜன் விஜய்அமர்நாத்ஆ.பிரகாஷ் வி.மகேஷ்பாபு வரவேற்றனர்.

இதில்கே.எஸ்.இரவிச்சந்திரன், எஸ்.மணிமுடி, தமிழன்பிரசன்னா, வே.உமாகாந்த், வழக்கறிஞர்கள் பி.புகழ்காந்தி மற்றும் மனுராஜ், சண்முகசுந்தரம், உமாராணி, கன்னிகை ஜி.ஸ்டாலின் சேகர். ஜே.மனோகரன், விஜயன் ராமகிருஷ்ணன், முத்துவேல், ராமசாமி, குமரி, எ.பாபு, நிர்வாகிகள்:ஜி.எம்.தேவன், கூ.பீ.ஜெயின், எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், எம்.தில்லை குமார்,

பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன்,கே.வள்ளி, சூனைசுப்பராயலு, வான்மதி கதிரவன், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின். எஸ்.அரி இ.மொய்தீன் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.நித்தியராஜ்எஸ்.ராஜதுரை, து.களரிமுத்து, தனஇளங்கோ,எஸ்.துலுக்காணம், மு.ஜெயகுமார்,எம்.ரமேஷ், ஆர்.ஸ்ரீதர், ம.வெற்றிவீரன், ஏ.கே.ரபிக்பேக், இரா.ஜெயசங்கரன், த.செபஸ்டின், மா.காந்தி, மு.கமலக்கண்ணன், டி.கிருஷ்ணன், டி.கே.விஜயராஜ், டி.கர்ணா, மு.முரளிதரன், எஸ்.நாராயணன்,,எம்.பி.குணசேகரன், Dr.பெ.வெற்றிகுமார், எட்வின், ஆர்.சூரியரகு,

எம்.வெற்றிவேலன், எஸ்.முத்துஇப்ராஹிம், விஜய்ராதாகிருஷ்ணன், எஸ்.பாலாஜி, எம்.முத்து, அ.தங்கசெல்வம், ந.கிருஷ்ணன், கே.ஜெயகுமார், என்.ராஜேஷ்குமார், அமுல் பாண்டியன், ஜெ.தேவ கிருபை, ரா.மணிகண்டன், ஜெ. கார்த்திகேயன், ஜெ.நவின்குமார்,த.பிரிதிவிராஜ், பி.நவின் ரசிபுல்லா(எ) ஸகுர், மா.மதியழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அ.ரகிபுல்லா (எ) ஹகுர் நன்றி கூறினார்கள்.

புழல் எம். நாராயணன் தலைமையில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## இ.கண்ணப்பன், ஆ. ராஜேந்திரன்,கே. சிவசங்கரன், நா.மோகன்குமார்,பா. சந்திரன்,பி.தரணி, பங்கேற்பு!

மாதவரம், மார்ச்.18-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, கழகக் கொடியேற்றி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி வீடு வீடாக துண்டு பிரசுரங்கள் வழங்கி திண்ணைப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 16 வது வட்டம் சடையங்குப்பம் பகுதியில், தமிழ்நாடு முதல மைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கழக கொடி ஏற்றி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு சடையங்குப்பம் பகுதியில் கழக கொடி ஏற்றி வைத்தார்.

பகுதி கழக நிர்வாகிகள் ஆ. ராஜேந்திரன், கே. சிவசங்கரன், நா. மோகன் குமார், பா. சந்திரன், பி. தரணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ். கருணாகரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, வட்டக் கழக நிர்வாகிகள் இ. அருள், இ. பரசுராமன், வி.மாரி. சி. முத்தையா, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என் .அஜய் தென்னவன், வக்கீல் சுரேந்தர், சடையங்குப்பம் நைனியப்பன்,மதி, பாலன், தன்ராஜ், எலந்தனூர் சிவபிரகாஷ், காமராஜபுரம் கிருபாகரன், பர்மா நகர் தினேஷ் சங்கர், மணலி புதுநகர் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், மணிகண்டன், குமார், சிவா, மகிழன், சடையங்குப்பம் சுரேந்தர், வேலு, சிவராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் அரசின் சாதனைகளான இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டம், மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, மகளிர் உரிமைத்தொகை, இலவச பேருந்து பயணம், கலைஞர் கான்கிரீட் வீடு திட்டம் ஆகியவை மாதவரம் வடக்கு பகுதி கழகத்தின் சார்பாக அச்சடிக்கப்பட்டு துண்டு பிரசுரங்களாக பொது மக்களிடம் வீடு வீடாக, பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர் வழங்கி திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, மீண்டும் 2026 ஆம் ஆண்டு திராவிட மாடல் அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் தொடர்ந்து ஆதரவளிக்குமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்டார்கள்.

துண்டு பிரசுரங்களை பெற்றுக் கொண்ட பொது மக்கள், தங்களது வாக்கு அனைத்தும் அடுத்த தேர்தலுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தான் கழகத் தினரிடம் என்று வாக்களித்தனர்.

தொடர்ந்து சடையங்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கழக கொடிக்கம்பத்தில் வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் கழக கொடி யேற்றி வைத்து இனிப்பு வழங்கினார். அதேபோல சடையங்குப்பம் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த கழக கொடிக்கம்பத்தில் சிவராமன் வேலு ஆகியோர் முன்னிலையில் கழக கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

சடையங்குப்பம் இருளர் காலனி பகுதியில் உள்ள பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கும்பொழுது, அங்கு இருந்த இரவு பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவனிடம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், இலவச பஸ் பயணம், இலவச புத்தகங்கள் ஆகியவற்றை வழங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் பெயரை கரும்பலகையில் எழுதுங்கள் என்று சொல்ல, அந்த மாணவன் அப்பா என்று எழுதியது பொதுமக்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த நிகழ்ச்சிகள் ஏராளமான பொதுமக்கள் தாமாக முன்வந்து திராவிட மாடல அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டத் துணைச் செயலாளர் வக்கீல் இ. வெங்கடேசன் நன்றி கூறினார்.

படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு! ஏ.வந்தேமாதரம் தலைமை! குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் -

# அய்யப்பன்தாங்கலில் முதல்வர் பிறந்தநாள் நலஉதவிகள் - மாபெரும் பொதுக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - மு.பெ.சாமிநாதன் மற்றும் சைதை சாதிக் - இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச் 18-

குன்றத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமுக மற்றும் அய்யப்பன்தாங்கல் ஊராட்சி திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று 18.3.25 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் அய்யப்பன்தாங்கல் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் ஜெமீலா பாண்டுரங்கன், ஒன்றிய கவுன்சிலர்கள் லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கே.எத்திராஜ், பொன். ஜீவா, எஸ்.ராஜாதேசிங்கு, டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், சுலைமான் சையத், கே.தங்கராஜ், எஸ்.ஜனார்த்தனன், அமுதா சத்யபிரியா, செ.அரிபிரசாத், பொன்.ராஜாபாதர், மு.க.பழனி, எம்.கஜேந்திரன், ஆர்.ஜெயராமன், ஆர்.கருப்பசாமி, ப.தீபக்குமரன், ஏ.சதீஷ்குமார், எம்.முருகன், அனிதா ராஜாபாதர், தவமணி சங்கர், சுதா ஜெயராமன், ஏ.ராஜா, துளசிபிரபு, எஸ்.கார்த்திக், ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள பொது கூட்டத்தில் செய்திகள் மற்றும் விளம்பரங்கள் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக், அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணியினர் நிர்வாகிகள் தி.க. பாஸ்கரன், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் எம். ஆர்.நவீன்ராஜ், வெ.கவிபாரதி, கு.பிரவீன்குமார், பா.கு.தமிழ்வாணன், செ.இமான் (எ) கௌதம், ஒன்றிய மாணவர் நிர்வாகிகள் ஆர். பிரபு, வெ.வசந்தகுமார், பா.மகேஸ்வரன், ஆர்.அரிபாபு, து.நாராயணன், ஒன்றிய மகளிரணி நிர்வாகிகள் காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ள பொதுக்கூட்டத்திற்கு கிளை கழக செயலாளர்கள் பெ. கோவிந்தன், ந.பா.அஸ்வின்குமார் நன்றியுரையாற்ற உள்ளனர். எனவே குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிளைக் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பகுதிச் செயலாளர் கே.கண்ணன் தலைமையில்

# கலைஞர் நகர் தெற்குப் பகுதியில் முதல்வர் பிறந்த நாள் வாழ்த்தரங்கம்!

## வி. செந்தில் பாலாஜி - மா.சுப்பிரமணியன் - கரு. பழனியப்பன் சிறப்புரை!

சென்னை, மார்ச் 18-

சென்னை தெற்கு மாவட்டம்- விருகம்பாக்கம் தொகுதி கலைஞர் நகர் தெற்குப் பகுதியில் மக்களோடு துணையாக இருக்கும் மகத்துவ முதல்வர் அவர்களின் பிறந்த நாள் வாழ்த்தரங்கம் இன்று (18.3.2025) 6 மணிக்கு எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் அருகில் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

வடக்கு பகுதி செயலாளர் மு.இராசா, உ.துரைராஜ், முருகேசன், .தங்கராஜ், வாசுகிபாண்டியன், எஸ்.உமாபதி, பெ.தியாகு, அ.பாபு, சோ.செந்தில் குமார், ஜம்புமுருகன், இராஜ்.செழியன், பூக்கடை ஆர்.பழனிசாமி, குமார், அ.கதிரேசன், கே.சதீஷ்கண்ணன், ஆர்.இராமமூர்த்தி, ஏ.சேர்மன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி, மா.சுப்பிரமணியன், இயக்குனர் கரு.பழனியப்பன், தமிழச்சி தங்கபாண்டியன், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., க.தனசேகரன் எம்.சி. கவிஞர் காசிமுத்துமாணிக்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, த.அரங்கநாதன், துணை மேயர் மு.மகேஷ்குமார், வே.உமாகாந்த், பொன்.வர.லோகு, ஆர். ஸ்டெல்லா ஜாஸ்மின், ரத்னா.நிலவரசி துரைரா, ஆர்.சசிக்குமார், கனிமொழி தனசேகரன், நிஷாசையத்,

மாவட்ட நிர்வாகிகள் க.சோமு, பி.மணிமாறன், எஸ்.அருணாச்சலம், எஸ். குணசேகரன், க.விஸ்வநாதன், மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், இரா.துரைராஜ், வே.ராஜன், எஸ். வி.ரவிச்சந்திரன், வி.எ.மதியழகன், சு.சேகர், துரை.கபிலன், துரைவீரமணி, சி. வெங்கடேசன்,

மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், ஏழுமலை, ப.ரவி, கந்தப்பன், இரயாரம் வ.செல்வக்குமார், அரிகிருஷ்ணன், ரா.பாலசுந்தரம், தா.பஷீர், பாஸ்கர், வி.ஆனந்தன், பாயசாதிக், வி.ராஜேஷ், ஆ. விஜயபாலா, ப.அருண்குமார், எஸ்.பி..அருள், கே. குமரேசன், ம.பார்த்திபன், கழக த.ரமேஷ், ஜெகதீசன், , அஞ்சல்ராமன், வரதன், மருத்துவர் அனிஸ், எம். எஸ்.ஹரிபாபு, கோ.பாஸ்கர், முகேஷ்,எஸ்.பாலமுருகன், கே.நீல கண்டன், எஸ். ஷகிலா,

விஜயகுமார், சா.நாகராஜன், து.ரஞ்சிக்குமார், பி. விஜயலஷ்மி, மு.கோவிந்தராசன், எஸ்.மைக்கேல், வீ.ஏ.ராஜா.எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு, சுபமுத்துவேல், எம்.விரா, பாரிநகர், கே.சசி, சி.நந்தகோபால், எஸ்.கருப்பசாமி, க.முத்துமாரி யப்பன், சோழா எஸ்.ரவி, ஈகை கருணாகரன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

அஜந்தா எஸ்.ரவி நன்றி கூறுகிறார்.

தலைமை: மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – முன்னிலை: எஸ்.முரளி – கோ.வி.லெனின்!

# மயிலை 124 அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 18-

மயிலை 124 அ வட்டக் கழகச் செயலாளர் மா.பா.அன்பு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு தலைமையில், பகுதி கழகச் செயலாளர் எஸ் .முரளி, தொகுதி பார்வையாளர் கோ.வி. லெனின் ஆகியோர் முன்னிலையில் மயிலை 124 அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம், எனது (வட்டக் கழகப் பொறுப்பாளர் மா.பா. அன்பு) தலைமையில் இன்று (18.03.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 7.00 மணியளவில் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் தகவல் தொழில் நுட்ப. அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்.கதிர், வி.கார்த்திக், ஆர்.ரஞ்சித், கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

124 அ வட்டக் கழகத்திற்குட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA 2) ஆகியோர் பங்கேற்க வுள்ள இக்கூட்டத்தில் கழக ஆக்க பணி குறித்து ஆலோசனை நடைபெற இருப்பதால் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா . அன்பு தெரிவித்துள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுரை கே.டி. கூடலரசன்

மார்ச் 18 (1999)

பள்ளிப் பருவத்தில